# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2368 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

## பதவிகள் - வெற்றிடம்

**கவனிக்க.- 2024.01.05 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி பகுதி I: தொகுதி (IIஅ) - இல் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் கீழே பிரசுரிக்கப்படுகின்றன.**

### பதிவாளர் நாயகம் திணைக்களம்

*முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி (சிங்களம்) – குருநாகல் மாவட்டம்*

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரர் 30 வயதுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வயதாகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் /தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்திகள் உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை,
2023, திசெம்பர் 21.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | ரஸ்நாயகபுர | வன்னி ஹத்பற்று (அபொக்கம பிரதேசம்) பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |
| குருநாகல் | பண்டுவஸ்நுவர - கிழக்கு | மடிகே மெதியால தேவமெதி ஹத்பற்று பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |

01-01

---

### பதிவாளர் நாயகம் திணைக்களம்

*முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி (சிங்களம்) – அநுராதபுரம் மாவட்டம்*

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரர் 30 வயதுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்களாகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் /தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை,
2023, திசெம்பர் 21.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2024, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, சனவரி மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | ஹொரொவ்பதான | ஹரூருள பலாத்த பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |

01-02

---

**இலங்கை பிக்ஷு பல்கலைக்கழகம் - அநுராதபுரம்**

மஹோபாத்யாய (துணை வேந்தர்) பதவி

1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க புத்தசிராவக்க பிக்கு பல்கலைக்கழக 26 ஆம் இலக்க சட்டம் மற்றும் 2012 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க திருத்தச் சட்டம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2023, ஏப்பிறல் 10 ஆந் திகதியிடப்பட்ட 03/2023 என்ற இலக்கமுடைய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரமும் மஹோபாத்யாய பதவிக்கு பின்வரும் தகைமைகளையுடைய பிக்குகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌத்த கற்கை நெறிகளில் அல்லது வேறேதாவது இத்துடன் தொடர்புடைய பாடத்தில் இரு வருடங்களுக்கு குறையாத காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விற்காக பெற்ற பட்டப்பின் பட்டதாரிப் பட்டம்.
2. கற்பித்தல் துறையில் பத்து வருட அனுபவம்;
3. கீழைத்தேய மொழிகளில் சிறந்த புலமையைக் கொண்டிருத்தல்;
4. உபசம்பதாவிற்குப் பின்னர் இருபது வருடங்களை பூர்த்தி செய்த சிறந்த ஒழுக்கமுடைய உபசம்பதா பிக்கு.

மஹோபாத்யாய மூன்று (03) வருட காலத்திற்கு நியமிக்கப்படுவார். அவர் பல்கலைக்கழகத்தின் ஒரு முழுநேர அலுவலராவார் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலராவார் மற்றும் பிரதான கல்விசார் அலுவலராவார். மஹோபாத்யாய ஒரு உத்தரிதர சபாவின் பதவி வழி அங்கத்தவரும் பேரவையினதும் மூதவையினதும் தலைவரும் ஆவார். பல்கலைக்கழக வளாகத்தில் ஒழுக்கத்தைப் பேணுவதற்கான பொறுப்பையும் கொண்டிருப்பார். மஹோபாத்யாய பல்கலைக்கழகத்தின் கணக்கில் அலுவலரும் பேரவையின் எந்தவொரு தீர்மானம் மற்றும் பணிப்புரை ஆகியவற்றிற்கு அமைந்தொழுகும் அலுவலருமாவார். மஹோபாத்யாயவின் கடமையானது ஒரு செயற்பாட்டை அமுல் நடாத்துவதும் அல்லது அந்த செயற்பாட்டை பேரவையின் அல்லது மூதவையின் தீர்மானத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதை உறுதி செய்வதாகும். மஹோபாத்யாயவானவர் மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது அறுபத்தைந்து வயதைப் பூர்த்தியடையும் திகதி ஆகிய இரண்டில் எந்நிகழ்வு முன்னால் நிகழுமோ, அத்திகதிவரை மஹோபாத்யாய பதவியினை வகித்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 63 வயதிற்கு குறைவாகவிருத்தல் வேண்டும்.

மஹோபாத்யாயவானவர் பல்கலைக்கழகத்தின் உச்சமட்ட சம்பள மட்டத்தில் நியமனம் பெறவும் அரசாங்கம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற ஏனைய படிகளுக்கும் உரித்துடையவராவார். அவருக்கு உத்தியோகபூர்வ வாகனமும் எரிபொருள் படியும் பல்கலைக்கழக இடப்பரப்பிலேயே இருப்பிட வசதிகளும் வழங்கப்படும்.

தெரிவு செய்தல் செயற்பாடானது ஆணைக்குழுவின் 2023, ஏப்பிறல் 10 அந் திகதியிடப்பட்ட 03/2023 என்ற இலக்கமுடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடத்தப்படுமென்பதுடன் இதனை www.busl.ac.lk என்ற இணையத்தளத்தினூடாகவும் பார்வையிடலாம்.

விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படல் வேண்டும்.

(i) மஹோபாத்யாயவானவர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கான நோக்கம் மற்றும் விண்ணப்பதாரி எதனை அடைவதற்கு எதிர்பார்க்கின்றார் தொடர்பாக தூரநோக்கு கூற்றொன்றை சமர்ப்பித்தல் மற்றும் விண்ணப்பதாரியின் பெயர், பிறந்த திகதி, முகவரி, தொலைபேசி இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியன அடங்கலான முழுமையான சுயதரவு, மேலேயுள்ள ஆவணங்களின் மென்பிரதியொன்றும் வேறேதாவது சான்று பகரும் ஆவணங்கள் PDF உருமாதிரியில் registrar@busl.ac.lk என்ற மின்னஞ்சல் மூலமாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும் ;

(ii) தற்போது பதவி துணை வேந்தரானவர் விண்ணப்பதாரி அல்லது பல்கலைக்கழகத்தின் முன்னைய துணைவேந்தரெனின், மேலேயுள்ள (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுக்கு மேலதிகமாக அவர் தன்னுடைய முதலாவது பதவிக் காலத்தில சாதித்தமை தொடர்பான முன்னிலைப்படுத்தலை அடக்கியுள்ள அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். registrar@busl.ac.lk என்ற மின்னஞ்சலுக்கு இந்த அறிக்கையின் மென்பிரதியொன்றும் PDF உருமாதிரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் ;

(iii) விண்ணப்பதாரியானவர் இலங்கை பிக்ஷு பல்கலைக்கழகம் நீங்கலாக, அரசாங்க துறை, கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபைகள் அல்லது மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பணியாற்றுபவர் என்றால் விண்ணப்பதாரி நியமனத்திற்குப் பின்னர் விடுவிக்கப்படுவாரா என்பதை சுட்டிக்காட்டும் தொழில் வழங்குநரிடமிருந்து கடிதமொன்று.

1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க புத்தசிராவக்க பிக்ஷு பல்கலைக்கழக 26 ஆம் இலக்க சட்டம் மற்றும் 2012 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க திருத்த சட்டம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2023, ஏப்பிறல் 10 ஆந் திகதியிடப்பட்ட 03/2023 என்ற இலக்கமுடைய சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளின் பிரகாரம் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் வரிசையில் மூன்று பெயர்களை தெரிவு செய்து உத்தரிதர சபாவிற்கு சமர்ப்பிக்கப்படும். உத்தரிதர சபாவானது ஒரு பிக்கு விண்ணப்பதாரியை தெரிவு செய்து அந்தப் பெயரை அதிமேதகு சனாதிபதிக்கு 1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க புத்தசிராவக்க பிக்ஷு பல்கலைக்கழக 26 ஆம் இலக்க சட்டம் மற்றும் 2012 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க திருத்த சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் கௌரவ அமைச்சரின் ஊடாக பரிந்துரை செய்யும்.

தகுதியுள்ள அனைத்து விண்ணப்பதாரிகளும் ஆகக் குறைந்தது 10-15 நிமிட காலப்பகுதிக்கு சுருக்கமான முன்னிலைப்படுத்தலொன்றை முன்வைக்குமாறு பேரவையின் விஷேட கூட்டமொன்றுக்கு அழைக்கப்படுவர்.

விண்ணப்பங்கள் “பதிவாளர், இலங்கை பிக்ஷு பல்கலைக்கழகம், புத்தளம் வீதி, அநுராதபுரம்” என்ற முகவரிக்கு 2024.01.23 ஆந் திகதின்று பி. ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பம் மற்றும் உரித்தான ஆவணங்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Post of Mahopadyaya" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

முடிவு நேரத்திற்குப் பின்னர் பெற்றுக்கொள்ளப்படும் மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வீ. டீ. கித்சிறி,
பதிவாளர்,
பேரவைக்கான செயலாளர்,
இலங்கை பிக்ஷு பல்கலைக்கழகம்,
அநுராதபுரம்.

2023.12.24.

12-76

---

**கவனிக்க.- 2024.01.12 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி பகுதி I: தொகுதி (IIஅ) - இல் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் கீழே பிரசுரிக்கப்படுகின்றன.**

---

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம்

**திணைக்களம் சார்ந்த சிரேஷ்ட நிறைவேற்று அலுவலர் சேவை வகுதியைச் சேர்ந்த மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை - 2024**

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தின் சிரேஷ்ட நிறைவேற்று அலுவலர் சேவை வகுதியைச் சேர்ந்த மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) பதவிக்காக இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உரிய அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் பதவிக்கு பொருத்தமான ஒருவர் தெரிவு செய்யப்படுவார். ஆட்சேர்ப்பு தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் பெப்புருவரி மாதம் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதி உரிய நேரத்தில் அறிவிக்கப்படும். இந்த நேர்முகப் பரீட்சையை ஒத்திவைக்க அல்லது இரத்துச் செய்ய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரிமை உள்ளது. பதவியுயர்வுத் திகதியாக நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் திகதி கருதப்படும்.

**02. சம்பள அளவுத் திட்டம் :**
பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 க்கு அமைவாக, பதவிக்குரிய சம்பளக் குறியீடு : SL - 03 - 2016 சம்பள அளவுத் திட்டம் : ரூபா 88,000.00 - 12 × 2,700 - ரூபா 120,400.00.

**03. சேவை நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும்; ஓய்வூதியத்திற்குரியதுமாகும். ஒரு வருட பதில் கடமைக் காலத்துக்கு உட்பட்டு இப் பதவியில் நியமிக்கப்படுவர்.

(ii) பணிக்கப்படுகின்றவாறு நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவேன் என்ற நிபந்தனைக்கு உட்படல் வேண்டும்.

**04. பொதுத் தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தான் பின்வரும் தகைமைகளைக் கொண்டவர் என திருப்திகரமான சான்றுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) நல்லொழுக்கமுடையவராகவும் சிறந்த தேகாரோக்கியத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) தற்போது அரச சேவையில் ஈடுபடுகின்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதனால் ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது ;

(ஈ) இந்தப் பதவிக்கு பதவியுயர்த்துவதற்கு தகுதி பெறுகின்ற தினத்திற்கு கிட்டிய ஐந்து (05) ஆண்டு காலத்துக்குள் தற்பொழுது வகிக்கின்ற பதவியின் வருடாந்த செயலாற்றுகை திருப்திகரமாக அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

(உ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் பிரகாரம் குறித்த காலப் பகுதிக்குள் ஒழுக்காற்றுக்கான தண்டனையைப் பெற்றிருத்தலாகாது. (நேர்முகப் பரீட்சை தினம் வரையிலான காலப் பகுதியும் உள்ளடக்கப்படல் வேண்டும்)

(ஊ) விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதிக்குள் அலுவலர் 6 (ii) மற்றும் 6 (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே, ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதப்படுவார்.

(ii) *கல்வித் தகைமைகள்.-* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டமளிக்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டுள்ள விடயப் பரப்புக்குரிய பட்டப்பின் படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) *அனுபவம்.-* கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தில் திணைக்களம் சார்ந்த நிறைவேற்று அலுவலர் சேவை வகுதியின் (SL - 01) I ஆம் தரத்தைச் சேர்ந்த பணிப்பாளர் (கரையோர வளங்கள் முகாமைத்துவம்) பதவியில் ஐந்து (05) ஆண்டுகள் தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலராக இருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த பதவியில் ஆகக் குறைந்தது ஐந்த (05) ஆண்டுகள் தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

மேலே குறிப்பிட்ட தகைமைகளுடன் பதவியுயர்வு பெறுகின்ற சேவை வகுதிக்கு/ பதவிக்கு உரிய நிறைவேற்றுத் தரத்தில் 18 ஆண்டுகளுக்குக் குறையாத தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ளவராக இருத்தல் வேண்டும்.

05. **தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை :**

***புள்ளிகள் வழங்கும் முறை.-***

| *புள்ளிகள் வழங்கும் பிரதான தலைப்புகள்* | | *ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| (1) மேலதிக சேவை அனுபவம்<br><br>➢ மேலே உள்ள 4 (iii) இல் அடிப்படைத் தகுதி அளவுகோல்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சேவைக் காலத்திற்கு மேலதிகமாகப் பூர்த்தி செய்துள்ள தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்துக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 1/2019 இன் பிரகாரம் கூடுதலான மேலதிக சேவைக் காலத்தைக் கொண்ட விண்ணப்பதாரருக்கு ஆகக்கூடிய புள்ளிகளும் ஏனைய விண்ணப்பதாரர்களுக்கு அதன் விகிதாசாரப்படி புள்ளிகளும் வழங்கப்படும்.<br>(3 மாதங்களுக்கு குறைவான காலத்துக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது) | | 40 |
| (2) மேலதிகக் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் :<br>அடிப்படைத் தகைமையாகப் பூர்த்தி செய்துள்ள பட்டப் பின் படிப்புக்கு மேலதிகமாக கரையோர வளங்கள் முகாமைத்துவம்/சுற்றாடல் முகாமைத்துவம்/ அபிவிருத்திக் கற்கை/ பொது முகாமைத்துவம் அல்லது வேலைவாய்ப்புத் துறையுடன் தொடர்புடைய பிற விடயப் பரப்புகளை உள்ளடக்கிய பாடநெறிகளுக்கு பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>(a) பட்டப் பின் படிப்பு - புள்ளிகள் 10<br>பட்டப் பின் டிப்ளோமா - புள்ளிகள் 09<br>முதலாவது பட்டம் (ஆட்சேர்ப்புக்கு தகுதி பெற்ற பட்டத்துக்கு மேலதிகமாக) - புள்ளிகள் 08<br>டிப்ளோமா (01 வருடத்துக்கு மேற்பட்ட) - புள்ளிகள் 06<br>டிப்ளோமா (06 மாதங்களுக்கு மேற்பட்ட) - புள்ளிகள் 05<br>சான்றிதழ் பாடநெறி (06 மாதங்களுக்கு மேற்பட்ட) புள்ளிகள் 04<br>சான்றிதழ் பாடநெறி (06 மாதங்களுக்கு குறைந்த) புள்ளிகள் 02<br>* ஆகக்கூடிய தகைமையைப் பூர்த்தி செய்துள்ள ஒரு பாடநெறிக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.<br>* ஆட்சேர்ப்புச் செய்யும் போது அல்லது வேறு பதவியுயர்வின் போது கவனத்தில் கொள்ளப்பட்ட தகைமைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.<br><br>(b) பதவியின் விடயப் பரப்புக்கு அமைவான உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஆற்றல் விருத்தி பயிற்சிப் பாடநெறி/நிகழ்ச்சித்திட்டத்துக்காக<br>• 01 மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகள் 05<br>• வாரம் 01 - மாதம் 01 க்கு இடையேயான பயிற்சி புள்ளிகள் 02<br>• வார 01 க்கு குறைந்த பயிற்சி புள்ளி 01<br>* ஆகக்கூடிய புள்ளிகளுக்கு உட்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சிப் பாடநெறிகள்/நிகழ்ச்சித் திட்டங்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும். | 10<br><br>05 | 15 |
| (3) துறைக்கான பங்களிப்பு -<br>கரையோர பாதுகாப்பு மற்றும் நிலைபேறான சுற்றாடல் முகாமைத்துவத்துக்குரிய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அத்துடன் அது சம்பந்தமான கருத்திட்டங்களுக்காக காட்டிய பங்களிப்புக்கு ஒரு நிகழ்ச்சித்திட்டத்துக்கு அல்லது ஒரு கருத்திட்டத்துக்கு 05 புள்ளிகள் விகிதம் | | 20 |
| (4) கணினி மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சி<br>(a) ஆங்கில பாடநெறி<br>• டிப்ளோமா பாடநெறி (காலம் 6 மாதங்களுக்கு மேற்பட்ட) புள்ளிகள் 10<br>• சான்றிதழ் பாடநெறி (காலம் 3-6 மாதங்களுக்கு இடைப்பட்ட) புள்ளிகள் 05<br>• சான்றிதழ் பாடநெறி அல்லது குறுகிய காலப் பயிற்சி (காலம் 3 மாதங்களுக்கும் குறைந்த) புள்ளிகள் 03<br>* ஆகக்கூடிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஒரு பாடநெறிக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.<br>(b) கணினி /தகவல் தொழில்நுட்ப பாடநெறி<br>• டிப்ளோமா பாடநெறி (காலம் 6 மாதங்களுக்கு மேற்பட்ட) புள்ளிகள் 10<br>• சான்றிதழ் பாடநெறி (காலம் 3-6 மாதங்களுக்கு இடைப்பட்ட) புள்ளிகள் 05<br>• சான்றிதழ் பாடநெறி அல்லது குறுகிய காலப் பயிற்சி (காலம் 3 மாதங்களுக்கும் குறைந்த) புள்ளிகள் 03<br>* ஆகக்கூடிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஒரு பாடநெறிக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும். | 10<br><br>10 | 20 |
| (5) மனப்பாங்கு மற்றும் ஆளுமை<br>• தொடர்பாடல் /சமர்ப்பித்தல் தேர்ச்சி புள்ளிகள் 02<br>• மனப்பாங்கு மற்றும் ஆளுமை புள்ளிகள் 03 | | 05 |
| மொத்தம் | | 100 |

தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் தேர்ச்சி ஒழுங்குமுறைக்கு அமைவாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களில் இருந்து பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்.

06. **விண்ணப்பிக்கும் முறை.-**

(i) மாதிரி விண்ணப்பம்.- இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் இந்த மாதிரி விண்ணப்பத்தை தங்களது சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் ஒவ்வொரு பகுதியும் விண்ணப்பதாரரால் அறிவுறுத்தப்பட்டபடி பூர்த்தி செய்தல் வேண்டும் என்பதுடன் ஏற்புடையதாகாத பிரிவுகள் இருப்பின் "ஏற்புடையதல்ல" எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பத்தில் வெற்றுக் கோடுகள் இருப்பின் அது நிராகரிக்கப்படலாம் என்பதை கண்டிப்பாகக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். (மாதிரி விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 01 தொடக்கம் 09 வரை முதலாவது பக்கத்திலும், 10 தொடக்கம் 16 வரை இரண்டாவது பக்கத்திலும், 17 மற்றும் 18 மூன்றாவது பக்கத்திலும் உள்ளடக்கியவாறு A4 அளவு தாளில் விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கவும்) விண்ணப்பத்தைத் தயாரிக்கும் போது பெயரை சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்பட வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவிக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும் என்பதால், விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் முன், இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்றவாறு உள்ளதா எனவும் அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதா எனவும் மீண்டும் சரிபார்த்துக் கொள்ளவும்.

(ii) விண்ணப்பப் படிவங்களை 2024.02.02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம், 4 ஆவது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வைத்தல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் நேர்முகப் பரீட்சையின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(iii) அரசாங்க சேவையில் ஈடுபடும் அலுவலர்கள், தமது விண்ணப்பங்களை தான் சேவையாற்றும் திணைக்களத்தின் அல்லது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். 2024.02.02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவப் பணிப்பாளர் நாயகத்துக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கோரி தனது விண்ணப்பத்தை தனது திணைக்களத் தலைவருக்கு முன்கூட்டியே சமர்ப்பித்தல் வேண்டும். கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தின் வேறு எவரேனும் அலுவலருக்கு தனிப்பட்ட பெயரில் விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் கூடாது. தற்பொழுது சேவையில் ஈடுபடுகின்ற நிறுனத்தின் ஊடாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டாலும் குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் பட்சத்தில் அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

(iv) கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.- விண்ணப்பதாரரின் கையொப்பத்தை விண்ணப்பதாரர் தற்பொழுது பணி புரியும் உரிய திணைக்களத் தலைவரால் அல்லது அவர் சார்பாக அவ்வாறு செய்ய அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் உறுதிப்படுத்தல் வேண்டும்.

07. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக அழைத்தல்** : ஒரு திகதியை நிர்ணயித்த பிறகு, அனைத்து விண்ணப்ப தாரர்களுக்கும் கடிதம் மூலம் அறிவிக்கப்படும்.

**குறிப்பு**.- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு, விண்ணப்பதாரர் அதற்கான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்ததாகக் கருதப்படல் மாட்டாது.

08. **ஆளடையாளம்** : விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றும் போது நேர்முகப் பரீட்சை சபை திருப்தியடையக் கூடியவாறு தங்கள் ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று அந்த நோக்கத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்);

(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

09. **தலைமை தொடர்பான ஆவணங்கள் :**

(i) விண்ணப்பத்துடன் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உரிய ஆவணங்களின் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும் என்பதுடன் மூலப் பிரதிகளை ஆயத்தப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் ஆவணங்கள் மூலம் சான்றுகளைச் சமர்ப்பித்து தங்களின் தகுதியை நிரூபிக்க வேண்டும்.

(iii) நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதியை சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்தலும் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ் (பிறப்பைப் பதிவு செய்யாத விண்ணப்பதாரர்கள் பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட உத்தேச வயதுச் சான்றிதழ்)

**குறிப்புகள் :**

a. பாடசாலைகளில் பயன்படுத்துவதற்காக அல்லது கல்வி நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவுக் குறிப்புகளில் இருந்து எடுக்கப்பட்ட சான்றிதழ் பிரித்தெடுப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

b. பிறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக சத்தியக் கடதாசிகள் அல்லது வேறு சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பிறப்புச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்/ பெயர்கள் மற்றும் விண்ணப்பதாரர் வழக்கமாகப் பயன்படுத்தும் அவ்வாறு அவர் பரீட்சையில் தோன்றும் பெயர்/பெயர்கள் ஆகியவற்றுக்கு இடையே வேறுபாடு இருந்தால் தேவைக்கேற்றவாறு பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 110) இலக்கம் 27 அல்லது 28 ஆம் கட்டளைக்கு அமைவாக தனது பிறப்புச் சான்றிதழில் காட்டப்பட்டுள்ள பெயர்/ பெயர்களை மாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) இலங்கைப் பிரசைக்கான பதிவு சான்றிதழ் அல்லது பரம்பரை பிரசையாக அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடிதம் (பொருத்தமானவாறு) ;

(இ) கல்வித் தகைமை தொடர்பில் மூலச் சான்றிதழ் அல்லது அத்தகைய சான்றிதழ் வழங்கப்படவில்லை எனில், வேறு ஏதேனும் தொடர்புடைய ஆவணம், அதாவது விண்ணப்பதாரர் பட்டப்படிப்பில் சித்தியடைந்துள்ளதாக பல்கலைக்கழகத்தின் பதிவாளரால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ ஆவணம்;

(ஈ) ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் (தேசிய ஆளடையாள அட்டை/ செல்லுபடியாகும் கடவுச்சீட்டு/செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்).

10. **போலியான தகவல்களை வழங்குதல்.-** இந்தக் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக எவரேனும் விண்ணப்பதாரருக்கு அதில் தோன்றுவதற்கு தகைமை இல்லை என கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்போ அல்லது அதற்குப் பின்னரோ தெரியவந்தால், அவரின் விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரர் அறிந்து கொண்டே ஏதேனும் போலியான தகவலை வழங்கியிருப்பதாக அல்லது ஏதேனும் முக்கிய விடயம் அறிந்து கொண்டே மறைத்துள்ளதாக தெரியவந்தால் அல்லது அவர் இந்தக் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றுவதற்கு தகுதியற்றவராக இருந்துள்ளார் என அவரின் சேவைக் காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிரூபிக்கப்பட்டால் அது அவரை உடனடியாக பணி நீக்கம் செய்வதற்கு காரணமாக அமையும். இந்த

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை உரியவாறு பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படும்.

11. இந்த ஒழுங்குவிதியில் விவரிக்கப்படாத வேறு ஏதேனும் தொடர்புடைய விடயமிருப்பின் அது பற்றி அரசாங்க சேவைகள் ஆணைக்குழு தீர்மானிக்கும்.

12. இதில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஊடாக அறிவித்தலில் ஏதும் ஒவ்வாமை ஏற்படுமிடத்து அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள ஊடக அறிவித்தல் மேலோங்கி நிற்கும்.

செயலாளர்,
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.
(அரசாங்க சேைகள் ஆணைக்குழு செயலாளரின்
பணிப்பின் படி).

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம்
திணைக்களம் சார்ந்த சிரேஷ்ட நிறைவேற்று அலுவலர் சேவை வகுதியைச் சேர்ந்த மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை - 2024

அலுவலக உபயோகத்துக்காக [ ]

01. பெயர் :

1.1 முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :
............................................................ ............................................................................
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில், உதா. SILVA A. B.)

1.2 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :
.........................................................................................................................
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்) : .............................................................................................
.........................................................................................................................

02. 2.1 பிரத்தியேக முகவரி :.............................................................................................
.........................................................................................................................

2.2 அலுவலக முகவரி :.............................................................................................
.........................................................................................................................

2.3 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் அனுப்ப வேண்டிய முகவரி : ............................
.........................................................................................................................

2.4 தொலைபேசி இலக்கம் : .............................................................................................

03. 3.1 பிறந்த திகதி :- ஆண்டு : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது)

3.2 2024.02.02 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் : ................... மாதங்கள் :................ நாட்கள் :..................

3.3 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

04. 4.1 பால் :
ஆண் [ ]
பெண் [ ]

4.2 சிவில் நிலைமை :
திருமணமானவர் [ ]
திருமணமாகாதவர் [ ]
தாரமிழந்தவர் [ ]

05. திணைக்களம் சார்ந்த நிறைவேற்று அலுவலர் சேவை வகுதி/இலங்கை நிர்வாக சேவை பதவியின் முதல் நியமனத் திகதி : .................................

06. திணைக்கள சார்ந்த நிறைவேற்று அலுவலர் சேவை வகுதி/இலங்கை நிர்வாக சேவை
தரம் 1 இற்கு பதவியுயர்த்தப்பட்ட திகதி :.................................

07. திணைக்களம் சார்ந்த நிறைவேற்று அலுவலர் சேவை வகுதி/ இலங்கை நிர்வாக சேவை தரம் I பதவியில் 05 வருடங்கள் தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலம் பூர்த்தியடையும் திகதி :.................................

08. திணைக்களம் சார்ந்த நிறைவேற்று அலுவலர் சேவை வகுதி/இலங்கை நிர்வாக சேவை பதவியில் 2024.02.02 ஆந் திகதி வரை சேவையாற்றியுள்ள மொத்த சேவைக்காலம் :.................................

09. நீங்கள் நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவரா? :.................................
அவ்வாறாயின் அது பற்றி விளக்குக :................................................

10. சம்பளமற்ற விடுமுறை :

| தொடர் இலக்கம் | சம்பளமற்ற விடுறைக் காலம் | விடுமுறையின் தன்மை (உரிய ஆவணங்களை இணைத்தல் வேண்டும்) |
|---|---|---|
| i. | | |
| ii. | | |

11. கல்வித் தகைமைகள் : (பட்டப்பின் படிப்பு பற்றிய விபரங்கள்) :

| பல்கலைக்கழகத்தின் பெயர் | பட்டம் | பட்டத்தின் வகுப்பு | ஆண்டு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

12. மேலதிக சேவை அனுபவம் (உறுதிப்படுத்திய பிரதிகளை இணைக்கவும்) :

| பதவி மற்றும் சேவை நிலையம் | காலம் |
|---|---|
| | |
| | |
| | |

13. மேலதிக கல்வி மற்றும் தொழில் தகைமைகள் (உறுதிப்படுத்திய பிரதிகளை இணைக்கவும்) :

| பூர்த்தி செய்துள்ள பயிற்சிப் பாடநெறி/நிகழ்ச்சித்திட்டம்/தொழில் தகைமை | காலம் |
|---|---|
| | |
| | |
| | |

14. துறைக்கான பங்களிப்பு :

| வழங்கியுள்ள பங்களிப்பு | காலம் |
|---|---|
| | |
| | |
| | |

15. ஆங்கிலம்/கணினிப் பாடநெறி (உறுதிப்படுத்திய பிரதிகளை இணைக்கவும்) :

| பூர்த்தி செய்துள்ள ஆங்கிலம்/கணினிப் பாடநெறி | காலம் |
|---|---|
| | |
| | |
| | |

16. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். நான் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் விபரம் போலியானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னைத் தகுதியற்றவர் எனக் கருதுவதற்கும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் எந்தவொரு இழப்பீட்டையும் செலுத்தாமல் என்னை பணி நீக்கம் செய்வதற்கும் ஆளாவேன் எனவும் அறிவேன்.

.................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ...................

17. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் (தேவையற்ற சொற்களை கீறி விடவும்) :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ..................................................................அவர்களை நான் பிரத்தியேகமாக அறிவேன் எனவும் அவர் ...................... ஆம் ஆண்டு ................... மாதம் ................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் : ..................................................
உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் : ....................................................
பதவி :....................................................
முகவரி : ....................................................
உத்தியோகபூர்வ முத்திரை : ....................................................
திகதி : ....................................................

குறிப்பு .- விண்ணப்பத்தை வர்த்தமானி அறிவித்தலில் 6 (iv) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உறுதிப்படுத்தல் வேண்டும்.

18. நிறுவனத் தலைவரின் பரிந்துரை :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ........................................................ இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில் சேவையாற்றுகின்ற ஒருவர் எனவும் அவர் மேலே குறிப்பிட்ட பதவிக்காக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்./ முடியாது.

.................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை)

திகதி : ..................................................
நிறுவனத் தலைவரின் பெயர் : ....................................................
பதவி :....................................................
சேவை நிலைய முகவரி : ....................................................

01-93

---

**அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழு**

சுகாதார அமைச்சு

**இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் II இற்கு பதவியுயர்த்துவதற்கு விண்ணப்பம் கோரல்**

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் II இற்கு 2020.10.27 இல் நிலவும் 20 வெற்றிடங்களுக்காக 2199/10 ஆம் இலக்க 2020.10.27 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நிரல் அமைச்சு/ மாகாண சபை/ உள்ளூராட்சி நிறுவனங்களில் கடமை புரியும் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **பூர்த்திசெய்யப்பட வேண்டிய தகைமைகள் :**

(i) ஆயுர்வேத மருத்துவ சேவையின் தரம் II இல் எட்டு (08) ஆண்டுகளுக்கு மேல் செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல், எட்டு (08) சம்பளவேற்றங்களை

உழைத்திருத்தல் அல்லது ஆயுர்வேத மருத்துவ சேவையின் தரம் I இன் உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் ;

(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்றுத் தண்டனை பெறாதிருத்தல் ;

(iii) ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்னிணைப்பு III இல் காட்டப்பட்டுள்ளவாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனம், பட்டப் பின் படிப்பு நிறுவனம் அல்லது பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலை முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் படிப்பு டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் ;

(iv) முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி/போதனா ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றில், மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றில்/ கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றில் கடமைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்/ மருத்துவ அதிகாரியாக 03 ஆண்டுகளுக்கு குறையாத சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். (ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் II இற்கு அல்லது தரம் I இற்குரிய தரம் ஒன்றில் முறைசார்ந்த ரீதியான நியமனம் அல்லது பதில் கடமை நியமனம் ஒன்றைப் பெற்று கடமை புரிந்துள்ள சேவைக் காலமும் கருத்திற் கொள்ளப்படும்.)

**குறிப்பு**.- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் இலக்கம் : PSC/EST/ 4/ 2/ 37/ 1 (IV)/ 2012 மற்றும் 2023.07.21 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் ஆயுர்வேத விசேட நிபுணத்துவ தரத்தில் உள்ள மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் II இற்கு விண்ணப்பிக்க முடியாது.

02. **பதவியுயர்வுத் திட்டம்**.-

2.1 பதவி வெற்றிடம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் (ஒவ்வொரு ஆண்டும் சனவரி 01 ஆந் திகதி மற்றும் யூலை 01 ஆந் திகதிக்கு) கடமையில் ஈடுபட்டுள்ள மேற்குறித்த தகமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படும். நியமன அதிகாரியால் நேர்முகப் பரீட்சை சபையை நியமித்தல் மற்றும் அதற்கு ஏற்புடைய புள்ளி வழங்கும் நடைமுறையை அங்கீகரித்தல் ஆகியன மேற்கொள்ளப்படுவதுடன் அதன் பிரகாரம் ஏற்புடைய நேர்முகப் பரீட்சை சபையினால் விண்ணப்பதாரர்களின் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு அந்த நேர்முகப் பரீட்சை சபையின் பரிந்துரைகள் அமைச்சு செயலாளரின் பரிந்துரையுடன் நியமன அதிகாரிக்கு சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் பதவியுயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2.2 இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் தரம் II இற்குரிய பதவியுயர்வானது வருடாந்த மதிப்பீடு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மாத்திரம் மேற்கொள்ளப்படும்.

2.3 அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையில் வெற்றிடங்களை நிரப்பும் போது ஒவ்வொரு ஆண்டும் சனவரி மாதம் 01 ஆந் திகதி அல்லது யூலை மாதம் 01 ஆந் திகதி செயல்வலுவுக்கு வர்த்தக வகையிலேயே பதவியுயர்வு மேற்கொள்ளப்படும்.

03. **வெற்றிடம் நிலவும் பதவிகள் எண்ணிக்கை 20 ஆகும்**.

3.1 2020.10.27 ஆந் திகதி முதல் 2023.01.01 ஆந் திகதி வரை ஒவ்வொரு மாதமும் உருவாகிய நிர்வாகம் தரம் II இன் வெற்றிடங்களுக்காக (உதா: 2020.10.27 இல், 2021.01.01 இல், 2021.07.01 இல், 2022.01.01 இல் ....... என்ற ரீதியில்) பதவியுயர்வு மேற்கொள்ளப்படுவதால் அத்தகைய திகதிகளின் போது மேற்குறித்த தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

3.2 ஓய்வு பெறம் சந்தர்ப்பத்தில் மேற்குறித்த தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள ஆயுர்வேத மருத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கும் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

04. இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் (விண்ணப்பத்தை www.ayurveda.gov.lk ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்) தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2024.02.16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் பதிவுத் தபாலில் ஆயுர்வேத ஆணையாளர் நாயகம், ஆயுர்வேத திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மகரகம எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் உறையின் இடப்பக்க மேல் மூலையில் "இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை உத்தியோகத்தர்களை நிர்வாக தரம் II இற்கு பதவியுயர்த்துவதற்கான விண்ணப்பம் கோரல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் II இன் ஏற்புடைய ஆரம்ப சம்பளம் SL 1-2016 சம்பளக் குறியீட்டின் 12 ஆம் படிமுறை ஆகும்.

06. இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் II இற்கு பதவியுயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சைக்கான புள்ளி வழங்கும் நடைமுறை பின்வருமாறு :

6.1 **சேவைக் காலம்** :

**(ஆகக்கூடிய புள்ளி 50)**

மேலே இலக்கம் 01 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த சேவைக்காலத்துக்கு மேற்பட்ட தரம் II இல் கடமை புரிந்துள்ள வருடம் ஒன்றுக்கு 2.5 புள்ளிகள் வீதம்.

ஆகக்கூடிய புள்ளிகள் 10

மற்றும் தரம் I இல் கடமை புரிந்துள்ள வருடம் ஒன்றுக்கு 04 புள்ளிகள் வீதம்

ஆகக்கூடிய புள்ளிகள் 40

(சேவை மூப்புக்கு புள்ளிகள் வழங்கும்போது, வருடம் ஒன்றுக்கு குறைவான காலத்திற்காக விகிதாசார ரீதியில் அ. சே. ஆ. சுற்றறிக்கை இலக்கம் 01/2019 இன் ஏற்பாடுகள் பிரகாரம் மேற்கொள்ளப்படும்)

6.2 **மேலதிக தகைமைகள்** :

**(ஆகக்கூடிய புள்ளிகள் 15)**

ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் உள்ளடங்கும் ஏதேனும் ஒரு பாடம் தொடர்பில் அரசின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு/வெளிநாட்டு பல்கலைக்கழகம் அல்லது உள்நாட்டு/வெளிநாட்டு பட்டப் பின் படிப்பு கல்வி நிறுவனம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டப் பின் படிப்பு தகைமைகள் தொடர்பில்,

(அ) சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப் பின் டிப்ளோமா - 05 புள்ளிகள்

(ஆ) ஆயுர்வேத மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞான முதுமாணி (M. sc.) - 08 புள்ளிகள்

(இ) ஆயுர்வேத மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான முதுதத்துவமாணி (M. Phill) அல்லது மருத்துவ (MD) (கல்விச் சபையின் சான்றிதழ் பெறாத) - 10 புள்ளிகள்

(ஈ) ஆயுர்வேத மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான முனைவர் (Ph. D) அல்லது மருத்துவ (MD) (கல்விச் சபையின் சான்றிதழ் பெற்ற) - 15 புள்ளிகள்

**குறிப்பு 02** :

(i) ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் உள்ளடங்கும் ஏதேனும் ஒரு பாடம் தொடர்பில் அரசின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு/வெளிநாட்டு பல்கலைக்கழகம் அல்லது உள்நாட்டு/ வெளிநாட்டு பட்டப் பின் படிப்பு கல்வி நிறுவனம் ஒன்றில் இருந்து பெறறுக்கொள்ளப்பட்ட மேற்குறித்த பட்டப்பின் தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கப்படும்.

(ii) மேலே இலக்கம் 01 இன் தகைமைகளின் கீழ் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்பட்ட கல்வித் தகைமைகளுக்காக இதன் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

6.3 **வெளியீடுகள்** :

**(ஆகக்கூடிய புள்ளிகள் 10)**

ஆயுர்வேத மருத்துவ துறையின் நலனுக்காக வெளியிடப்பட்டுள்ள சர்வதேச/தேசிய ரீதியிலான சஞ்சிகைகள்/ நூல்கள்/வெளியீடுகள் ஆகியவற்றுக்காக

(அ) சர்வதேச மட்ட சஞ்சிகைகளில் துறை சார்ந்த அறிவுசார் ஆராய்ச்சிகள்/வெளியீடுகளுக்காக (ஒன்றுக்கு 05 புள்ளிகள் வீதம் ஆகக்கூடிய புள்ளிகள் 10) அல்லது

(ஆ) துறை சார்ந்த வெளியிடப்பட்ட அறிவுசார் நூல்களுக்காக (ஒன்றுக்கு 05 புள்ளிகள் வீதம் ஆகக்கூடிய புள்ளிகள் 10) அல்லது

(இ) தேசிய மட்ட சஞ்சிகை/ வெளியீடு/ பத்திரிகை ஒன்றில் துறை சார்ந்த 500 சொற்களுக்கு குறையாத ஆய்வுக் கட்டுரைகளுக்காக (ஒன்றுக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடிய புள்ளிகள் 10)

**குறிப்பு 03** :

(i) நூலாசிரியர்கள் பலரது பங்கேற்பில் வெளியிடப்பட்ட வெளியீடுகள் தொடர்பில் விண்ணப்பதாரரின் பங்களிப்பின் அளவு தெளிவாக காட்டப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பங்களிப்பின் அளவின் விகிதாசாரமாக விண்ணப்பதாரருக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

(ii) ஒரே தரவு/ ஆராய்ச்சி தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்படும், பெரும்பாலும் சமமான முடிவுகளுக்கு வந்துள்ள வெளியீடுகள் வெவ்வேறான வெளியீடுகளாக கருதப்பட மாட்டாது. அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் புள்ளி வழங்குவதற்காக ஒரு வெளியீடு மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படும்.

(iii) மேற்குறித்த வெளியீடுகள் தொடர்பான துறைக்கு ஏற்புடையது/ பொருத்தமானதென சுகாதார அமைச்சின் அறிஞர் குழுவொன்றுக்கு சமர்ப்பித்து அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் பரிந்துரையின் பிரகாரம் வெளியீடுகளுக்காக புள்ளிகள் வழங்கப்படும்.

6.4 **பயிற்சி** :

**(ஆகக்கூடிய புள்ளிகள் 15)**

(அ) 02 கிழமைகளுக்கு குறையாத உள்நாட்டு/வெளிநாட்டு ஆயுர்வேத துறைக்கு ஏற்புடைய வைத்தியசாலை முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப் பாடநெறி (பாடநெறி ஒன்றுக்கு 01 புள்ளி வீதம் 15 புள்ளிகள்) அல்லது

(ஆ) நியமன அதிகாரியால் முறைசார்ந்த ரீதியில் நியமனம் செய்யப்பட்ட ஆயுர்வேத சுகாதார முகாமைத்துவம் தொடர்பான பதவி ஒன்றில் பதில் கடமை சேவை அனுபவம். (வருடம் ஒன்றுக்கு 03 புள்ளிகள் வீதம் 15 புள்ளிகள்)

**குறிப்பு 04** : இங்க முறைசார்ந்த நியமனம் என்பது அரசாங்க சேவை ஆணைக்குழு/ நிரல் அமைச்சின் செயலாளர் ஆயுர்வேத ஆணையாளர்/ ஒவ்வொரு மாகாணத்தினதும் அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ளவாறு மாகாண ஆளுநர்/மாகாண பிரதான செயலாளர்/மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ள நியமனம் ஆகும்.

6.5 **ஏனைய தகைமைகள்** :

**(ஆகக்கூடிய புள்ளிகள் 10)**

(அ) இணைப்பு மொழி/சர்வதேச மொழி பற்றிய பாடநெறி (ஆகக்கூடிய புள்ளிகள் 2.5)

(ஆ) முகாமைத்துவம்/தகவல் தொழில்நுட்பம் பற்றிய பாடநெறி (ஆகக்கூடிய புள்ளிகள் 2.5)

(இ) துறைக்கு ஏற்புடையதாக ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றல் மற்றும் ஏனைய விசேட கடமைகளுக்காக (ஆகக்கூடிய புள்ளிகள் 05)

**குறிப்பு 05** :

(i) மேலே 01 இல் பூர்த்திசெய்யப்பட வேண்டிய தகைமைகளின் கீழ் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்பட்ட கல்வித் தகைமைகளுக்காக இங்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

(ii) இதன் மூலம் கருதப்படுவது, அரசாங்க சேவை ஆணைக்குழு/நிரல் அமைச்சின் செயலாளர்/ஆயுர்வேத ஆணையாளர்/ஒவ்வொரு மாகாணத்தினதும் அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ளவாறு மாகாண ஆளுநர்/ மாகாண பிரதான செயலாளர்/ மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு/ ஆயுர்வேத ஆணையாளர் நாயகம்/மாகாண ஆயுர்வேத ஆணையாளரால் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் ஆகும்.

**குறிப்பு 06** :

(i) மேற்குறித்த துறைகள் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள,

450 மணித்தியாலங்களுக்கு குறையாத முழுநேர/ பகுதிநேர டிப்ளோமா பாடநெறி ஒன்றுக்கு - 2.5 புள்ளிகள்

150 மணித்தியாலங்களுக்கு குறையாத முழுநேர/ பகுதிநேர டிப்ளோமா பாடநெறி ஒன்றுக்கு - 1.5 புள்ளிகள்

03 மாதங்களுக்கு குறையாத சான்றிதழ் பாடநெறி ஒன்றுக்கு - 0.5 புள்ளிகள் என புள்ளிகள் வழங்கப்படும்.

(ii) மேலே ஒவ்வொரு துறை தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஆகக்கூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும் என்பதுடன் ஏனைய தகைமைகளின் கீழ் பெற்றுக்கொள்ள முடியுமான ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு 10 ஆகும்.

07. **தெரிவு செய்யப்படும் முறை** : நேர்முகப் பரீட்சை சபை ஒன்றின் மூலம் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்களின் கல்வி, தொழில், சேவைமூப்பு, சேவை அனுபவம், மற்றும் பயிற்சி தொடர்பான சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் பரீட்சிக்கப்பட்ட பின்னர் மேற்குறித்த புள்ளி வழங்கும் நடைமுறைக்கு அமைவாக ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்கள் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் பிரகாரம் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் II இற்கு பதவியுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

08. இந்த அறிவித்தல் மூலம் உள்ளடக்கப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவை குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக கருதப்படும். மேலும் அறிவித்தலின் சிங்களம்,

தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுக்கு இடையில் ஏதேனும் பொருத்தமின்மை அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள மொழியே செயல்வலுப் பெறும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் கட்டளைப் பிரகாரம்,

செயலாளர்,
சுகாதார அமைச்சு.

கொழும்பு,
*2024*, சனவரி *11*.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் II இற்கு பதவியுயர்த்துவதற்கான விண்ணப்பம்**

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :..........................................

02. முழுப்பெயர் :..........................................

03. பிறந்த திகதி :..........................................

04. தேசிய அடையாள அட்டை இல. :..........................................

05. (i) நிரந்தர முகவரி :..........................................

(ii) தொலைபேசி இலக்கம் :..........................................

06. (i) சேவை நிலையத்தின் முகவரி :..........................................

(ii) தொலைபேசி இலக்கம் :..........................................

07. (i) முதல் நியமனத் திகதி :..........................................

(ii) தற்போதைய தரம் :..........................................

(iii) தரம் II இற்கு நியமிக்கப்பட்ட திகதி :..........................................

(iv) 2022.12.31 இல் தரம் II இல் சேவைக் காலம் :..........................................

(v) தரம் I இற்கு நியமிக்கப்பட்ட திகதி :..........................................

(vi) 2022.12.31 இல் தரம் I இல் சேவைக் காலம் :..........................................

(vii) சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா :..........................................

(viii) சேவை நிரந்தரமாக்கப்பட்ட திகதி :..........................................

08. விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் 01 (IV) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெற்றுள்ள தகைமைகள் :

| விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமை இலக்கம் 01 (IV) இற்கு ஏற்புடையதாக வகிக்கும் பதவி மற்றும் நிறுவனம் | பதவிக்குரிய தரம் (தரம் I/நிர்வாகம் I/II) | பதவியின் தன்மை (நிரந்தரம்/ பதில் கடமை) | உரிய பதவியில் சேவைக்காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| | | | | |
| | | | | |

09. பெற்றுள்ள பட்டப் பின் பட்ட தகைமைகள் :
(இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு III பிரகாரம்)

| நிறுவனம் | பாடநெறியின் பெயர் | காலம் | பூர்த்தி செய்த திகதி (பயிற்சிக் காலம் உள்ளடங்கலாக) |
|---|---|---|---|
| | | | |
| | | | |

10. பெற்றுள்ள பட்டப் பின் பட்டம் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு III பிரகாரம் எந்தப் பாடப் பரப்பிற்கு உட்பட்டது என்பது பற்றி :..........................................
..........................................
..........................................

11. ஏனைய அரச கரும மொழிகள் தொடர்பான தேர்ச்சி :

(i) சிங்களம்/தமிழ் ஆண்டு :..........................................

12. சம்பளமற்ற லீவு/ அரைச் சம்பள லீவு/ வெளிநாட்டு லீவு (சம்பளமற்ற/ சம்பளத்துடன்) பெற்றிருப்பின் அது தொடர்பான விபரம் :

| சம்பளமற்ற லீவு/அரைச் சம்பள லீவு/வெளிநாட்டு லீவு (சம்பளமற்ற/சம்பளத்துடன்) பெறுவதற்கான காரணம் | லீவு கால எல்லை | பெறப்பட்ட லீவுகளின் அளவு |
|---|---|---|
| | முதல் வரை | ஆண்டு மாதம் திகதி |
| | | |

13. வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை சித்தியடைந்துள்ளார்/சித்தியடையவில்லை என்பது பற்றி : ................

14. உங்களது சேவைக் காலத்திற்குள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? (அவ்வாறாயின்)

| ஒழுக்காற்றுத் தீர்மானம் | குற்றச்சாட்டின் பிரகாரம் குற்றம் புரியப்பட்ட கால எல்லை |
|---|---|
| | |

மேலே காட்டப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதென உறுதிசெய்கின்றேன்.

பெயர் :..........................................
கையொப்பம்: ..................................

திகதி :....................

01-241

**கவனிக்க.- 2024.01.19 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி பகுதி I: தொகுதி (IIஅ) - இல் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் கீழே பிரசுரிக்கப்படுகின்றன.**

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோரல் - 2023**

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவிகளில் நிலவும் 16 பதவி வெற்றிடங்களுக்கு பொருத்தமான நபர்களை தெரிவு செய்து கொள்வதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பிரகாரம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரிப்பப்படிவத்திற்கமைய பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்களை கீழ் குறப்பிடப்படும் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, இல. 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கோரல்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்களைக் கோருவதற்கான இறுதித் திகதி 2024, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதியாகும்.

**குறிப்பு 1 :** விண்ணப்பம் அல்லது அதனுடன் தொடர்புடைய கடிதமொன்று தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் சம்பந்தமாக கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

01. **ஆட்சேர்ப்பு முறை.-** அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடையே, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் திறமை அடிப்படையில் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள், நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய பாதுகாப்புப் பின்னணி தொடர்பான தடை நீக்கல் அறிக்கையைப் (Security clearance background Report) பெற்றுக்கொண்டதன் பின்னர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகளை வழங்கும் நடைமுறைக்கமைய தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி மற்றும் நியமிக்கப்படும் எண்ணிக்கை தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

02. (i) **ஆட்சேர்ப்புக்கான தகைமை** : உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.

(II) **அனுபவம்.-** உயர் நீதிமன்ற சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

உயர் நீதிமன்ற சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் அரசாங்க நிறுவனமொன்றில் சட்டம் சார்ந்த துறையில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத கீழ் குறிப்பிடப்படும் அலுவல்களுடன் தொடர்புடைய அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

I. வழக்குகள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
II. ஒப்பந்தம் தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைகள்.
III. ஏற்புடைய சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள் ஒழுங்குவிதிகள் தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைகள்.
IV. சட்ட மூலங்கள், சுற்றறிக்கைகள், ஒழுங்கு விதிகள் (பிரமாணங்கள்) போன்ற சட்ட ரீதியான எழுத்தாவணங்கள் தயாரிப்பு நடவடிக்கைகள்.
V. பல்வேறு நியதிச் சட்ட நிறுவனங்களினால் நடாத்தப்படும் சட்டம் அல்லது நீதிமன்ற நடவடிக்கைகள் அல்லது விசாரணை நடவடிக்கைகள்.

(III) உடற் தகைமைகள்.- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் அலுவல்களை மேற்கொள்வதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(IV) **ஏனைய தகைமைகள்:**
I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
II. நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்;
III. விண்ணப்பதாரி அல்லது குடும்ப அங்கத்தவரொருவர் இலங்கையின் சட்டமொன்றின் கீழ் எந்தவொரு குற்றவியல் குற்றத்திற்கும் குற்றவாளியாகியிருத்தல் கூடாது;
IV. விண்ணப்பம் கோருவதற்கான இறுதித் திகதியன்று பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

03. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவிக்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு நியமனங்களை வழங்குவதற்கு முன்னர் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் பணியாற்றுவதற்கு தகுதி பெற்றவரா என்பதனைக் கணடறிவதற்காக பாதுகாப்புப் பின்னணி தொடர்பான தடை நீக்கல் அறிக்கை (Security clearance background Report) கோரப்படும். அந்த அறிக்கைகக்கமைய ஆணைக்குழுவில் பணியாற்றுவதற்குத் தகுதி பெற்றவரா என்பதனை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

(ii) வேண்டிக்கொள்ளப்பட்ட மொழி மூலத்தை பின்னர் மாற்றிக் கொள்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாதென்பதோடு, தங்களால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழிமூலமே தாங்கள் நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் மொழிமூலமாகும்.

(iii) தனக்கு வழங்கப்படும் பதவிக்குரிய கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்குத் தவறும் மற்றும்/ அல்லது நியமிக்கப்படும் பிரதேசத்தில் கடமைகளைப் பொறுப்பேற்பதனை நிராகரிக்கும் அல்லது தவறும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பின் பிரகாரம் அதிகாரம் உண்டு.

(iv) இப்பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதிய உரித்துடையதாகும். தங்களுக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை அடிப்படையிலான தீர்மானத்திற்கு தாங்கள் உட்படுதல் வேண்டும். தாங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைக்கு / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைக்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் விதத்தில் தாங்கள் பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(v) இந்த நியமனம் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டு மூன்று (03) வருட காலத்தினுள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(vi) 2020.10.16 ஆந் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய இந்தப் பதவியில் நியமிக்கப்பட்டு மூன்று வருடங்களுக்குள் சேவையில் இணைந்துகொண்ட மொழிக்கு மேலதிகமாக அடுத்த அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டுமென்பதோடு, அரச கரும மொழியல்லாத மொழிமூலமொன்றினூடாக சேவையில் இணைந்துகொண்ட உத்தியோகத்தர்கள் தகுதிகாண் காலப் பகுதியினுள் உரிய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(vii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும், நிதி ஒழுங்கு விதிகளுக்கும் திணைக்களம் சார்ந்த ஏனைய பணிப்புரைகளுக்கும் இந்த நியமனம் கட்டுப்படுதல் வேண்டும்.

04. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

05. **சம்பள அளவுத்திட்டம்** :-
2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணை I- இற்கமைய இப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 58,295.00 - 5×1,335-5×1,630 - 15× 2,170 - ரூபா 105,670.00 - ( SL - 5-2016)ஆகும்.

06. தகைமையை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு கீழ் குறிப்பிடப்படும் புள்ளிகள் வழங்கும் நடைமுறை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

| இல. | விடயம் | புள்ளிகள் | உச்சளவு புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள் மற்றும் மேலதிக தொழில் தகைமைகள்** | 30 | 30 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான முதுமாணிப் பட்டம் | 25 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமா அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கல்வி நிறுவகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்பின் டிப்ளோமா | | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட | | |
| | • முதலாம் வகுப்பு சித்தியுடனான சட்டமாணிப் பட்டம் | 20 | |
| | • இரண்டாம் வகுப்பு மேல்நிலை சித்தியுடனான சட்டமாணிப் பட்டம் | 15 | |
| | • வகுப்பு சித்தியுடனான சட்டமாணிப் பட்டம் | 12 | |
| | • சாதாரண சித்தியுடனான சட்டமாணிப் பட்டம் | 10 | |
| | (ஈ) • சட்டக் கல்லூரியின் இறுதியாண்டில் முதலாம் வகுப்பு சித்தியைப் பெற்றிருத்தல் | 15 | |
| | • சட்டக் கல்லூரியின் இறுதியாண்டில் இரண்டாம் வகுப்பு சித்தியைப் பெற்றிருத்தல் | 10 | |
| | **குறிப்பு** I : சட்டக்கல்லூரியின் இறுதிப் பரீட்சையில் சிறப்பு சித்தியைப் பெற்றிருத்தால் மாத்திரம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 10 புள்ளிகள் வழங்கப்படும்.<br>**குறிப்பு** II : உயர் தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | | |
| 02 | **மேலதிக தொழில் சார் அனுபவம்** | | |
| | • அடிப்படைத் தகைமையான 2 வருட கால அனுபவத்திற்கு மேலதிகமாக பெற்றுக்கொண்டுள்ள தொழில்சார் அனுபவம் இங்கு கவனத்திற்கொள்ளப்படும். | | 15 |
| | • வழக்குகளுடன் தொடர்புடைய ஆவணங்களை தயாரித்தல் மற்றும் திறந்த நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்தல் | | |

| | இலஞ்சம் அல்லது ஊழல்கள் அல்லது குற்றவியல் வழக்குகளை தாக்கல் செய்தல் அல்லது ஆவணங்களை தயாரித்தல் (ஒரு வழக்கிற்கு) | நீதிமன்றத்தில் தோற்றி விடயங்களை முன்வைத்தல் அல்லது விடயங்களை முன்வைப்பதறகு உதவியாக இருத்தல் (ஒரு வழக்கிற்கு) |
|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 2 | 5 |
| மேன் முறையீட்டு நீதிமன்றம் | 2 | 4 |
| மேல் நீதிமன்றம் | 2 | 3 |
| நீதிவான் நீதிமன்றம் | 2 | 5 |

| இல. | விடயம் | புள்ளிகள் | உச்சளவு புள்ளிகள் |
|---|---|---|---|
| | **குறிப்பு** :<br>**மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக**<br>1. சிரேஷ்ட சட்டத்தரணியொருவரின் சான்றிதழ் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி தோற்றிய வழக்கு இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். (வாதி அல்லது பிரதிவாதி) ;<br>2. குறித்த வழக்குத் தீர்ப்புக்களின் பிரதிகள் அல்லது இறுதியாக வழக்கு நடைபெற்ற திகதிய வழக்கு அறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை நேர்முகப் பரீட்சை சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். | | |
| 03 | **மொழித் தேர்ச்சி** | | **15** |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஆங்கில மொழியை பிரதான பாடமாக உள்ளடக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் | 15 | |
| | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய மட்டத்தில் மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் (Moot court competitons) ஆங்கில மொழியில் காண்பித்துள்ள திறமை | 12 | |
| | **ஒற்றையர் போட்டி**<br>(i) முதலாமிடம்/சிறப்பான திறமை - 12<br>(ii) இரண்டாமிடம் - 10<br>(iii) மூன்றாமிடம்/ஏனைய திறமைகள் - 08 | | |
| | **குழுப் போட்டி**<br>(i) முதலாமிடம்/சிறப்பான திறமை - 10<br>(ii) இரண்டாமிடம் - 08<br>(iii) மூன்றாமிடம்/ஏனைய திறமைகள் - 06 | | |
| 05 | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில மொழி டிப்ளோமா அல்லது வேறு நிறுவனமொன்றிலிருந்து ஆங்கில மொழிக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட NVQ 5 அல்லது அதனிலும் உயர் தர டிப்ளோமா | 10 | |
| | (ஈ) க.பொ.த.(உயர் தரம்) பரீட்சையில் (உள்நாட்டு அல்லது லண்டன்) ஆங்கில மொழிக்கு குறைந்தது அதி திறமை சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது IELTS மொத்தப் புள்ளி 6.5 அல்லது அதனிலும் அதிகம், TOEFL-IBT 79 அல்லது அதனிலும் அதிகம், TOEFL-CBT 213 அல்லது அதனிலும் அதிகம் அல்லது TOEFL-PBT 550 அல்லது அதனிலும் அதிகமாக இருத்தல் | 08 | |
| | (உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஆங்கில மொழிக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட உயர் சான்றிதழ் அல்லது வேறு நிறுவனமொன்றிலிருந்து ஆங்கில மொழிக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட NVQ 4 மட்ட சான்றிதழ் | 05 | |
| | **குறிப்பு** : உயர் தகைமைக்கு மாததிரம் புள்ளிகள் வழங்கப்படும். | | |
| 04 | நிகழ்கால சட்டப் பிரச்சினைகள், புதிய சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள் மற்றும் இலஞ்சம் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய வழக்குத் தீர்ப்புக்கள் பற்றிய அறிவு (நேர்முகப் பரீட்சை சபையினால் பரீட்சிக்கப்படும்.) | | **25** |
| 05 | **நேர்முகப் பரீட்சையின்போது காண்பிக்கும் திறமை** | | **15** |
| | ○ பொது அறிவு | 05 | |
| | ○ இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சட்டத்துடன் தொடர்புடைய நவீன போக்குகள் மற்றும் தலைப்புக்கள் பற்றிய அறிவு | 05 | |
| | ○ தர்க்கத் திறமை, தெளிவாக மற்றும் நாவன்மையுடன் தர்க்கங்களை முன்வைக்கும் ஆற்றல் | 05 | |
| | **மொத்தம்** | | **100** |

7. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்**:-

- பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினத்தில் நேர்முகப் பரீட்சை சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்:-

(i) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

- மேலும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையின்போது அல்லது கோரும்போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கீழ் குறிப்பிடப்படும் எழுத்தாவணங்களை தேவைப் பிரகாரம் சமர்ப்பிப்பதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

(i) கல்விச் சான்றிதழ்கள் ;
(ii) பிறப்புச் சான்றிதழ் ;
(iii) தேசிய ஆளடையாள அட்டை;
(iv) அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (நீதிமன்ற அலுவலர் அல்லது குறைந்தது 10 வருடங்களுக்கு குறையாத தொழில் அனுபவத்தைக் கொண்டுள்ள சட்டத்தரணி ஒருவரால் வழங்கப்பட்ட சான்றிதழ்களினூடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) ;
(v) இரண்டு நற்சான்றிதழ்கள் (அதில் ஒன்று கிராம அலுவலரின் சான்றிதழாக இருத்தல் வேண்டும்).

**கவனிக்க** :

(அ) விண்ணப்பத்துடன் எந்தவொரு எழுத்தாவணத்தையோ அதன் பிரதியையோ இணைத்தல் கூடாது ;
(ஆ) எழுத்தாவணங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கும் சந்தர்ப்பத்தில் குறித்த ஆவணங்களை சமர்ப்பிப்பதற்குத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் தொடர்பாக கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

8. **விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய விதம்** :

(i) விண்ணப்பங்களை 2024, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, இலக்கம் 36, மலலசேக்கர மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அன்றைய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் ;

(ii) இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய விண்ணப்பதாரிகள் அவர்களுடைய விண்ணப்பங்களை A4 அளவிலான தாளில் தயாரித்து, முதலாம் பக்கத்தில் இல. 01 முதல் 10 வரையும் இரண்டாம் பக்கத்தில் இல. 11 முதல் 17 வரையும், மூன்றாம் பக்கத்தில் இல. 18 உம் அமையுமாறு தயாரித்து தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும்;

(iii) விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கோரல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்திபெற்ற நொத்தாரிசு/ முப்படையைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது ரூபா 47,615.00 அல்லது அதிலும் அதிகமான மாதாந்த ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையைச் சேர்ந்த நிரந்தரப் பதவியை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(v) தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தாம் பணியாற்றும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இத்துடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற்போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

09. **பொய்யான தகவல்களை வழங்குதல்**:
தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவலொன்று பொய்யானது அல்லது தவறானது எனத் தெரியவரின் தங்களுடைய விண்ணப்பதாரி நிலை இரத்துச் செய்யப்படும்.

அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் தெரியவந்தால் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகளின் கீழ் பணியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாதிருப்பதற்கான உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்குரியதாகும்.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரயோகங்களில் ஏதேனும் ஒவ்வாமைகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழிப் பிரயோகமே மேலோங்கியிருத்தல் வேண்டும்.

12. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் அல்லது ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஏதேனும் சிக்கல் நிலைமை ஏற்பட்டால் அது சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பிரகாரம்,

பணிப்பாளர் நாயகம்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப்
புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு,
2024, சனவரி 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோரல் - 2023**

**Calling Applications for the Recruitment of Officers to the Post of Assistant Director (Legal) of the Commission to Investigate Allegations of Bribery or Corruption - 2023**

01. முதலெழுத்துக்களை பின்னர் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்:
(உதா:- NIMAL A.B.C.D.)..............................................................
..............................................................

02. முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (ஆங்கிலத்தில்): ..............................................................
..............................................................

03. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ..............................................................
..............................................................

04. (i) நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : (அனுமதிப் பத்திரம் இந்த முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும்)
..............................................................
..............................................................

(ii) கடமை முகவரி (அரசாங்க சேவையில் பணியாற்றுபவராயின்) : ..............................................................
..............................................................

05. பால்நிலை : ஆண் - 0
பெண் - 1 ☐

06. தேசிய ஆளடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

07. இனம் : ( சிங்களவர் -1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, - முஸ்லிம் - 4, ஏனைய - 5) ☐

08. 1. பிறந்த திகதி :
ஆண்டு : ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

ii. 2024.02.09 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள் : ☐☐

09. தொலைபேசி இல. : கையடக்க: ☐☐☐☐☐☐☐☐☐☐
நிலையான: ☐☐☐☐☐☐☐☐☐☐
Whatsapp/ Viber ☐☐☐☐☐☐☐☐☐☐

10. மின்னஞ்சல் முகவரி : ..............................................................

11. தொழில் தகைமைகள் :
(i) உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த திகதி : ............................
(ii) 2024.02.09 ஆந் திகதியன்று தொழில்சார் அனுபவம் :

| கால எல்லை | | | தொழில்சார் அனுபவம் பற்றிய விபரம் (தோற்றிய நீதிமன்றங்கள் மற்றும் வழக்குகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடுதல் வேண்டும்) |
|---|---|---|---|
| ஆண்டு | மாதம் | திகதி | |
| | | | |
| | | | |

12. மேலதிக கல்வித் தகைமைகள் :
(i) முதுமாணிப் பட்டம்/பட்டப்பின் டிப்ளோமா : ..............................................................
பல்கலைக்கழகம் :..............................................................
பட்டம் பற்றிய விபரம் :..............................................................

(ii) சட்டம் பற்றிய பட்டம் : ..............................................................
பல்கலைக்கழகம் :..............................................................
பட்டம் பற்றிய விபரம் :..............................................................

(iii) சட்டக் கல்லூரியின் சித்தி பற்றிய விபரம் : ..............................................................

13. ஆங்கில மொழித் தேர்ச்சியுடன் தொடர்பான தகைமை :
(i) பட்டம் : ..............................................................
(ii) டிப்ளோமா : ..............................................................
(iii) க. பொ. த. (உ. த.)/க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியம் பெறுபேறு :
..............................................................
(iv) IELTS/ TOEFL : ..............................................................
(v) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய மட்டத்தில் மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் (Moot court competitions) ஆங்கில மொழியில் காண்பித்துள்ள திறமை தொடர்பான விபரம் :
..............................................................

14. ஏனைய தகைமைகள் : ..............................................................

15. அரச சேவையிலிருந்து பணி நீக்கப்பட்ட அல்லது பதவி வறிதாக்கப்பட்ட ஒருவரா :
ஆம்/இல்லை ..............................................................

16. குற்றமொன்றுக்காக எப்போதாவது நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? ..............................
பதில் ஆமெனில் அது பற்றிய விபரம் :..............................................................

17. தாங்கள் தற்போது தொழிலொன்றை வகிப்பவராயின் அது பற்றிய விபரம் :
நிறுவனம் :..............................................................
முதல் நியமனத் திகதி : ................................................
பதவி : ..............................................................
சம்பளம் :..............................................................

18. தங்களைப் பற்றிய தகவல்களை வழங்க முடியுமான உறவினர் அல்லாத இருவரின் பெயர் மற்றும் முகவரி :

(I) ................................................ (II) ................................................
................................................ ................................................
................................................ ................................................

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் பொய்யானது அல்லது பிழையானது என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் அறியக் கிடைத்தால் நான் பொருத்தமற்றவராகுவதற்கு காரணமெனவும், நியமிக்கப்பட்டதன் பின்னர் அறியக் கிடைத்தால் எந்த விதமான நட்டஈட்டையும் செலுத்தாமல் பணி நீக்கம் செய்வதற்கு ஆளாகுவேன் என்பதையும் நான் அறிவேன்.

..............................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -.........................

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:-**

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கின்ற.......................................... இல் வசிக்கும் திரு./திருமதி/செல்வி ............. ......................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், 2024 ...... மாதம் ........ ஆந் திகதி ............... இல் அவர் எனது முன்னிலையில் கையொப்பத்தை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

..............................................................
கையொப்பம்.

திகதி : .........................
பெயர் மற்றும் பதவிப் பெயர் .............................
பதவி முத்திரை :.......................
திகதி :

**குறிப்பு** – தற்போது அரசாங்க சேவையில் பணி புரிபவர்களாயின் குறித்த திணைக்களத் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக அவ்வாறு கையொப்பத்தை உறுதிப்படுத்துவதற்கான அதிகாரம் பெற்ற உத்தியோகத்தராவார்.

விண்ணப்பதாரி அரச சேவையில் பணி புரிபவராயின் :-

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கின்ற திரு./திருமதி/ செல்வி ................................. என்பவர் இந்த அமைச்சில்/ அலுவலகத்தில் நிரந்தர/ தற்காலிக பதவியொன்றை வகிப்பவரெனவும், உத்தியோகத்தரின் தனிப்பட்ட பெயர்வழிக் கோப்பு மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களுக்கமைய அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இந்தப் பதவிக்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது.

..........................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் : .........................
பதவி : .......................
திணைக்களம் : ..........................
திகதி : ..........................
(தேவையற்ற வசனங்களை வெட்டிவிடவும்)

01-184